**செய்தி வெளியீடு எண்: 1 5 8** **நாள் : 15.04.2015**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திருமதி எஸ்.கோகுல இந்திரா அவர்கள் தலைமையில் கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் சரக அளவிலான செயல்பாடுகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் சென்னையிலுள்ள கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரகக் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், அரசின் மிகச்சீரிய திட்டங்களான ஏழை எளியோருக்கான விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம், பள்ளிச் சிறார்களுக்கான விலையில்லா சீருடை வழங்கும் திட்டம், நெசவாளர் மருத்துவ காப்பீடு திட்டம், நெசவாளர் கடன் அட்டை வழங்கும் திட்டம் மற்றும் மாண்புமிகு முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் முன்னேற்றம் குறித்தும், 2014–15ஆம் ஆண்டில் துறை மானியக் கோரிக்கையின்போது சட்டப்பேரவையில் வெளியிடப்பட்ட அறிவுப்புகள் மற்றும் சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டவாறு கைத்தறி இரகங்களின் விற்பனையை மேம்படுத்தும்விதமாக பெருநகரங்களில் (Metro cities) நடைபெற்ற கண்காட்சி மற்றும் விற்பனை குறித்தும் அதன் மீது மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கைகள் குறித்தும் துறையால் செயல்படுத்தப்படுத்தப்பட்டு வரும் இதர அனைத்து திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் நெசவாளர்களின் வாழ்வாதாரம் மேம்படவும், சங்கங்களின் வளர்ச்சிக்காகவும் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர்சிங், இ.ஆ.ப., கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் திரு.தி.ந.வெங்கடேஷ், இ.ஆ.ப., கூடுதல் இயக்குநர் முனைவர் க. கர்ணன், இணை இயக்குநர்கள், சரக துணை / உதவி இயக்குநர்கள் மற்றும் கோஆப்டெக்ஸ் நிறுவன அலுவலர்கள் கலந்து கொண்டனர். கடலூர் மற்றும் குறிஞ்சிப்பாடி பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி லுங்கிகள் மற்றும் துணிகளை அதிகமாக வாங்கும் ஸ்பெயின் நாட்டிலிருந்து வந்திருந்த திருமதி கவிதா பரிவார் அவர்களும் கலந்து கொண்டார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**